# விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறும் அரசு – கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!






விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறும் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தந்த போது, திண்டிவனத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், மகளிர், பொதுமக்கள் உற்சாக வரவேற்பளித்தனர். உடன் அமைச்சர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கவுதமசிகாமணி மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறுகிற பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தந்த போது, திராவிட மாடல் அரசின் சாதனைக்கு சாட்சியாக விக்கிரவாண்டியில் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்களும் விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகத்தினரும் திரண்டு வந்து உற்சாக வரவேற்பளித்தனர். உடன் அமைச்சர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கவுதமசிகாமணி மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.





விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற கழக நிகழ்ச்சியில் பங்கேற்க சென்ற போது, நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு அரசூர், திருவெண்ணெய்நல்லூர் பகுதிகளில் மாவட்ட – ஒன்றிய – நகர – பேரூர் கழக நிர்வாகிகள், இளைஞரணி தம்பிமார்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் திரண்டு வந்து உற்சாக வரவேற்பளித்தனர். உடன் அமைச்சர் க.பொன்முடி, மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கவுதமசிகாமணி மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 5.11.2024 அன்று விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில் மாணவ, மாணவிகளின் கற்றல் திறன் மேம்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டு, பரிசுகளை வழங்கினார். வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன் (விழுப்புரம்), அன்னியூர் அ.சிவா (விக்கிரவாண்டி), சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர்.தாரேஸ் அஹமது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சி.பழனி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சுருதஞ் ஜெய் நாராயணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் உள்பட ஆசிரியர்கள் உடன் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 5.11.2024 அன்று விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில் மாணவ, மாணவிகளின் கற்றல் திறன் மேம்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டு, பரிசுகளை வழங்கினார். வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன் (விழுப்புரம்), அன்னியூர் அ.சிவா (விக்கிரவாண்டி), சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர்.தாரேஸ் அஹமது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சி.பழனி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சுருதஞ் ஜெய் நாராயணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் உள்பட ஆசிரியர்கள் உடன் உள்ளனர்.